மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.45/2024

**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20–ம் நாள் புதன் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்டெலாமேரி | தொழில் | : |
| கணவர் பெயர் | : அருணாசலம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : மங்களமேடு | சமயம் | : |
| சாதி | : | வயது | :44/2025 |

முதல் விசாரணை

i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக வாதிக்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். வாதி பெயரில் உள்ள தாவா சொத்தின் மின் இணைப்பு(06–331–004–0226) மற்றும் வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. (அது **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) எனது வாக்காளர் அடையாள அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. (அது **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 06.06.2022 ம் தேதியிட்ட EOW & DCB திருச்சியில் கொடுத்த புகார் மனுவின் கை நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ப்ராமிசரி நோட்களின் கை நகல்களை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 27.01.2024 ஆம் தேதியிட்ட 4–ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பிரதிவாதி தரப்பில் தோன்றா தரப்பினராகிவிட்டதால் குறுக்கு விசாரணை இல்லை.